மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையையும், அறிவுரையையும் பெற்று எதிர்காலத்திலே சென்னை மாநகராட்சி மூலமாக சென்னை மாநகராட்சியை உள்ளடக்கி இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டி ஆலோசனைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் அங்கே இருக்கிற ஒன்றிய அலுவலகத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூம் ஒதுக்கப்பட்டு மக்கள் குறைகளைக் கேட்பதற்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையிலே ஒவ்வொரு தொகுதியிலும் கார்ப்பரேஷன் ஏ.சி.ஆபிஸ் இருக்கிறது. ஆனால், அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அலுவலகமோ, ரூமோ ஒதுக்கப்படவில்லை. அதை ஒதுக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 250, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

250—

கறவை மாடுகள் வாங்க வழங்கப்படும் கடன் தொகையை உயர்த்துதல்.

*14417— திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கறவை மாடுகள் வாங்குவதற்கு தற்போது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் தொகையை ரூ. 10,000 ஆக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கறவை மாடுகள் வாங்க ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் 2 வழங்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 6 ஆயிரத்திற்கு. ஒரு மாடு 3 ஆயிரம் ரூபாய் என்றும், அந்த மாடு வாங்கி கறந்த பிறகு இன்னொரு மாடும் 6 மாதம் கழித்துக் கொடுக்கிறார்கள். மாட்டின் விலையெல்லாம் தற்போது ஏறியிருப்பதால் ஒரு மாடு இன்று 5 ஆயிரத்திலிருந்து 6 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதைக் கணக்கில் கொண்டுதான் நான் 10 ஆயிரம் ரூபாய் வரை நீட்டிக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறேன். அதை அரசு மீண்டும் பரிசீலனை செய்து 10 ஆயிரம் ரூபாய் அல்ல 12 ஆயிரம் ரூபாய் வரை கொடுத்தால் கூட அந்த அளவுக்கு அந்த ஐ.ஆர்.டி.பி. கடன் வாங்குகின்ற விவசாயிகளுக்கு பலன் தரும் என்ற வகையில், அதை மீண்டும் பரிசீலனை செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கறவை மாடுகள் வாங்குவதற்கு வங்கிகள் தேசீய வேளாண்மை மற்றும் கிராம வளர்ச்சி வங்கிகள் நிர்ணயம் செய்த விலைக்கு கடன் வசதி அளித்து வருகிறது. நபார்டு அடியிற்கண்டவாறு கறவை மாடுகளுக்கு விலை நிர்ணயம் செய்துள்ளது. உயர்ந்த இன செயற்கை பசு மாடு சராசரி நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் பால் அளிக்கக் கூடிய 2 மாடுகள் ரூபாய் 8,500 என்றும், உயர்ந்த ரக முரா எருமை சராசரி 6 லிட்டர் பால் அளிக்கக் கூடிய 2 மாடுகள் ரூபாய் 9,500. மேற்கண்டவாறு நபார்டு வங்கிகள் இந்த விலைகளை நிர்ணயம் செய்திருப்பதால் தான் உள்ளாட்சித்துறை மூலமாக இதை பரிசீலிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு தெரிவித்தப் பட்டியலை இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் நடைமுறையில் அது சாத்தியமில்லை. ஆகவேதான் நபார்டுக்கு மீண்டும் எழுதி அந்தத் தொகையை கூடுதலாகக் மீண்டும் அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு அதிகாரிகளுடன் கலந்து மேற்கொண்டு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.